# 5 ஆண்டுகால கழக ஆட்சியில் விவசாயிகள் போராட்டம் இல்லாமல் வாழ்ந்தார்கள்!

## சட்டப்பேரவையில் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

என்று ஒரு வார்த்தை சொன்னார். அதில் எங்களுக்கெல்லாம் வருத்தம். இது பேசிய இயக்கம். திராவிட இயக்கங்கள் பேசிய இயக்கம். கொள்கையைப் பேசிப் பேசி ஆட்சியைப் பிடித்தவர்கள் நாங்கள்; மக்களுடைய மனதைத் தொட்டவர்கள்; நாங்கள் மக்கள் மனதிலிருந்து வந்தவர்கள். அத்தகைய உணர்வுள்ளவர்கள் திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்.

### நாங்கள் Tension. ஆக, இருந்தோம்! நீங்கள் Relax ஆக இருக்கிறீர்கள் !

நாங்களாக இருந்தாலும் சரி, அ.தி.மு.க.வாக இருந்தாலும் சரி. நாங்கள் எல்லாம் முரசொலி. இன்னும் சொல்லப்போனால், நாங்கள் அமைச்சராக இருந்தபொழுது, கலைஞர் அவர்கள் இருந்தபோதும் சரி, மு.க. ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதும் சரி, எங்களுக்கெல்லாம், மந்திரிகளுக்கெல்லாம் ஒரு பரபரப்பு இருக்கும். காலையில் 6.00 மணிக்கெல்லாம் அங்கே போக வேண்டும். காலை 6.00 மணி, 7.00 மணி, 8.00 மணியைத் தாண்டினால்தான் எங்களுக்கெல்லாம் நிம்மதியாக இருக்கும். ஏனென்றால், கலைஞரானாலும் சரி, எங்களுடைய முதல்வராக இருந்தாலும் சரி, காலையில் newspaperஐப் பார்த்துவிட்டு, தொலைக்காட்சியைப் பார்த்துவிட்டு, முதல்வராக இருந்த எங்கள் அண்ணன் தளபதி அவர்கள், அந்தந்த துறைகளின் அதிகாரிகளைத் தொடர்புகொண்டு நேரடியாகப் பேசுவார்கள். அந்தத் துறையின் அமைச்சரைத் தொடர்புகொண்டு, இந்த இடத்தில் இந்தப் பிரச்சினை என்று பேசுவார்கள். Collectorsக்கும் tension. ஆக, tensionலேயே ஐந்தாண்டு காலம் இருந்தோம். ஐந்தாண்டு காலமாக இருந்தாலும், ஐந்தாண்டு காலமும் tension ஆக நாங்கள் மக்களுடைய பிரச்சினைகளைப் பார்த்தோம். ஆனால், நீங்கள் எல்லாம் relax ஆக இருக்கிறீர்கள். அதுதான் எங்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறது. நீங்கள் relax ஆக இருக்கிறீர்கள். நீங்கள் எல்லாம் relax ஆக இருக்கிறீர்கள். நாங்கள் எல்லோரும் tension ஆக இருந்தோம். இங்கே அமர்ந்திருக்கக்கூடிய IAS அதிகாரிகள் எல்லோரும் tension ஆக இருப்பார்கள்.

அமைச்சர் Bussy ஆனந்த், busy ஆகதான் இருக்கிறார். அவர் busy ஆக இருக்கிறார். ஏனென்றால், எல்லா கட்சித் தொண்டர்களையும் அவர் பார்க்க வேண்டியுள்ளது. புதிதாக வந்த இயக்கம். நாங்கள் 1996ல் அமைச்சராக இருந்தபோது, எங்களுக்கும் அதுபோலத்தான். இளைஞர்களும் எங்களை வந்து பார்ப்பார்கள், கேட்பார்கள். இனிமேல்தான் உங்களுக்குத் தெரியப்போகிறது. பாருங்கள். எதிர்ப்பாக மேடையில் பேசுவது எளிது, ஆட்சி நடத்தும்போதுதான் கஷ்டங்கள் தெரியும். பாருங்கள், தற்போது மூன்று மாதங்கள்தான் ஆகியுள்ளது.

விவசாயிகள் போராட்டம் இல்லாமலேயே 5 ஆண்டுக்காலம் வாழ்ந்தார்கள். அதைப் பாராட்ட வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) ஐந்தாண்டு காலம் விவசாயிகள் தமிழகத்தில் போராட்டம் இல்லாமல் வாழ்ந்தார்கள். நான் முதன்முதலாக தஞ்சையில் போய் விவசாயக் கருத்துக் கேட்புக் கூட்டத்தை நடத்தும்போது எப்படி வெடித்தது? அதனைத் தாங்கி ஒவ்வொன்றாக, இன்னும் சொல்லப்போனால், இங்கிருக்கின்ற முன்னாள் அமைச்சர் பெருமக்கள், கே.என். நேரு அவர்கள் பெரிய விவசாயி, மாடுகளெல்லாம் வளர்க்கிறார், அவர் கிட்டத்தட்ட 1,000 மாடுகளை வளர்க்கிறார், விவசாயம் 1,000 ஏக்கர் வாழை, தென்னை, நெல் பயிர்கள். அதேபோல, அண்ணன் எ.வ.வேலு அவர்கள் tractor ஓட்டுவார், வயலில் அண்டை வெட்டுவார்.

Ceilingஆ? (சிரிப்பு). ஆயிரக்கணக்கான ஏக்கர் என்று பேசிவிட்டேன். Nonceiling அப்போது இருந்தது. இப்போது செங்கோட்டையன் அவர்களுக்கு எவ்வளவு இருக்கிறது என்று கணக்குப் பார்த்தால் தெரியும். (சிரிப்பு) அவர் தென்னை விவசாயி.

### நெல்லுக்கு கிள்ளிக் கொடுக்கிறீர்கள்!

அமைச்சர் அவர்கள் எந்தப் போராட்டம் என்று தெரியாமல் பேசுகிறார். அது திருவண்ணாமலையில் SIPCOTக்கு நிலம் எடுக்கும்போது நடந்த போராட்டம். அதைப் பற்றியும் அவர் பேசுகிறார். விவசாயிகளுக்கு நெல் விலையை உயர்த்தி, இதுவரை அவர் கேட்கவேயில்லை. எங்கள் ஆட்சியில் திடீர் திடீரென்று மழை பெய்யும். உங்கள் ஆட்சியில் மழையே பெய்யவேயில்லை. திடீர் திடீரென்று விவசாயம் எல்லாம் பாதிக்கப்பட்டு, உடனுக்குடனேயே எங்களுடைய அன்றைய முதலமைச்சர் அவர்கள் அங்கு சென்று பார்த்து, நாங்கள் அங்கு ஓடிச் சென்று பார்த்து, மழை பெய்தாலும் நானும், சக்கரபாணி அவர்களும் சாலையில் சென்று நிற்க வேண்டும். தஞ்சை டெல்டா பகுதியில் சென்று நிற்போம். அங்கு இருந்தோம், அங்கு இருந்து விவசாயிகளின் போராட்டக் களத்தில் உட்காரவில்லை. பச்சைத் துண்டுவினுடைய ஆதிக்கம் அதிகம். எங்களுடைய ஆட்சியில்தான் பச்சைத் துண்டு அதிகமாக வளர்ந்தது. விவசாயிகள் சங்கம் நிமிர்ந்து நடந்தார்கள்.

ஆனால், இப்போது நீங்கள் சொன்னீர்கள்தான், ஆட்சிப் பொறுப்பேற்றால், முதலமைச்சர் அவர்கள் சொன்னாரே, நாங்கள் ஆட்சிக்கு வந்தால், நான் விவசாயி வீட்டுப் பிள்ளையாக பிறப்பேன் என்று சொன்னாரே அது மக்கள் மனதில் இருந்தது. அதனால்தான் மாற்றத்தை, சரி இவர்கள்தான் கொடுத்தார்கள். எடப்பாடி அவர்கள்தான் கொடுத்தார்கள். முந்தைய ஆட்சி வந்து, இந்த ஆட்சி வந்து, ஒரு புது ஆட்சி வந்தால், நெல்லுக்கு எதும் அள்ளிக் கொடுப்பார்கள் என்று பார்த்தால் இப்போது கிள்ளிக் கொடுத்திருக்கிறார். நாங்கள் நெல்லுக்கு 2,550 ரூபாய் கொடுத்தோம், இப்போது 2,750 ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். 200 ரூபாய் ஏற்றிக் கொடுத்திருக்கிறார்கள்.

நாங்களும் கடந்த ஆட்சியில், நான் இதே இடத்தில்தான் அமர்ந்து கூறினேன். (கடந்த ஆட்சியில் இதற்கு முன் தான் அமர்ந்திருந்த இருக்கையைச் சுட்டிக் காட்டி கூறினார்.) நாங்கள் கரும்பு விலையை அறிவித்துவிட்டு, அடுத்த பட்ஜெட்டிலிருந்து நாங்கள் கரும்புக்கு டன்னுக்கு 4,000 ரூபாய் கொடுப்போம் என்று இதே இடத்தில் அமர்ந்துதான் நான் கூறினேன். இடைக்கால பட்ஜெட் தாக்கல் செய்யும்போது, செங்கோட்டையன் அவர்கள் இல்லை என்று நினைக்கிறேன். அப்போது அவருடைய பதவியை அவர் resign செய்துவிட்டார் என்று நினைக்கிறேன். (சிரிப்பு) அப்போது resign செய்துவிட்டார். அப்போது அவர் இல்லை. 4,000 ரூபாய் கொடுப்போம் என்று அந்த இடத்தில் அமர்ந்து அறிவித்தேன். அதேபோல், நெல்லுக்கு 2,550 ரூபாய் கொடுத்தோம். 3,500 ரூபாய் கரும்புக்கு விலை உயர்த்தி கொடுத்தோம். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் கரும்புக்கு விலை 4,500 ரூபாய் கொடுப்போம் என்று நீங்கள் சொன்னீர்கள். நெல்லுக்கு விலை 3,500 கொடுப்போம் என்று சொன்னீர்கள். அதைத்தான் கூறினேன், இப்போது கிள்ளிக் கொடுக்கிறீர்கள் என்று கூறுகிறேன், மூன்று மாதத்தில் கொடுத்திருக்கிறீர்கள், போகப்போக கொடுப்பீர்கள் என்கிற நம்பிக்கை இருக்கிறதா என்று தெரியவில்லை. ஏனென்றால், முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை நெருக்கடி இருக்கிறது என்று சொல்லிவிட்டார்கள்.

### ரூ 20 ஆயிரம் கோடி விவசாயக் கடனை தள்ளுபடி செய்த கழக அரசு!

இதை நாங்கள்தான் கொடுத்துவிட்டோம், இதை ஏன் இவ்வளவு தூரம் படித்துக்கொண்டு என்கிறேன்? நாங்கள் எங்களுடைய தேர்தல் அறிக்கையில் சொன்னோம், ரூ.2,500 நெல்லுக்குக் கொடுப்போம் என்று சொன்னோம். கரும்புக்கு ரூ.4,000 கொடுப்போம் என்று சொன்னோம். அதை எங்களுடைய ஆட்சி முடியும்போது, ரூ.2,555 ஆக சன்ன இரகத்தை நாங்கள் உயர்த்திக் கொடுத்திருக்கின்றோம்; படிப்படியாகக் கொடுத்தோம். நீங்கள் ரூ.3,500 சொல்லியிருக்கிறீர்கள். ஆக, இப்போது நீங்கள் சொன்ன வார்த்தைகளைத்தான் மக்கள், விவசாயிகள் அதிகமாக நம்பிவிட்டார்கள். நம் முதல்வர் அவர்கள் ‘அடுத்த ஜென்மம் இருந்தால் வேளாண் குடும்பத்தில் நான் பிறக்க வேண்டும்’ என்று சொன்னார்கள். ஆக, அந்த உணர்வு இருக்கின்ற காரணத்தினால், விவசாயியாகப் பிறக்க வேண்டும் என்ற உணர்வு இருக்கின்ற காரணத்தினால், இப்போது முதலமைச்சர் ஆன காரணத்தினால், விவசாயிகளெல்லாம் நம்பிவிட்டார்கள். விவசாயிகள் நம்பி, இப்போது நெல் விளைய வைத்திருப்பார்கள்.

கடன் தள்ளுபடி என்று சொன்னார்கள். கலைஞர் அவர்கள்தான் முதன்முதலில், 1996ல் ரூ.7,000 கோடி விவசாயிகளுக்காகத் தள்ளுபடி செய்தார்கள்.

ஒரு பைசாவுக்காக போராடிய விவசாயிகள் பல குண்டடிபட்டு இறந்தார்கள். ஆனால், அன்றையதினம் 1996 ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, ரூ.7,000 கோடியை ஒரே strokeல் தள்ளுபடி செய்தார். எங்களுடைய முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதற்கு பிறகு, 2021 ஆம் ஆண்டு 19,600 கோடி ரூபாயை தள்ளுபடி செய்தார். எப்படியென்றால், ரூ.12,000 கோடி விவசாய கடனை தள்ளுபடி செய்தார்; அதேபோல், நகைக் கடனையும் சேர்த்து செய்தார்கள். ஆக, ரூ.20,000 கோடி அளவிற்கு தள்ளுபடி செய்த இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம்; எங்களுடைய தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தள்ளுபடி செய்தார்கள்.

### கலைஞர் 6 மாதத்திற்கு வட்டியில்லா கடனைக் கொடுத்தார்!

இவற்றையெல்லாம் தெரிந்துகொண்டுதான் தேர்தல் அறிக்கை தயார் செய்ய வேண்டும். RBI விதிகளின்படி, தள்ளுபடி செய்த ரூ.6,000 கோடியை 3 மாதத்தில் நீங்கள் திரும்ப கட்ட வேண்டும். ரூ.20,000 கோடி அளவிற்கு வாங்கிய கடனை தள்ளுபடி செய்வோம் என்று நீங்கள் வாக்குறுதி அளித்தீர்கள்.

சரி. தற்போது இந்த மாதிரி கூறுவது நல்லதல்ல; மாற்றத்திற்கு நல்லதல்ல. இது தெரிந்துதான் நாங்கள்

## மாற்றத்தையே காணோம்; ஏமாற்றம்தான் அதிகமாக உள்ளது!

தேர்தல் அறிக்கையில், விவசாய கடனை தள்ளுபடி செய்வோம் என்று சொல்லவில்லை. நாங்கள் சொல்லவில்லை; நீங்கள் சொன்னீர்கள். 5 ஏக்கர் வரை நாங்கள் முழுமையாகத் தள்ளுபடி செய்வோம் என்று. இன்னும் கூடுதலாக நீங்கள் சொன்னீர்கள். அவரவர்கள் ஒரு ஏக்கருக்கு ரூ.50,000, ரூ.1,00,000 வாங்கிவிட்டு, தள்ளுபடி செய்வார்கள் என்று நினைத்துக் கொண்டு பணத்தை செலுத்தவில்லை. இன்னும் சொல்லப்போனால், ஒரு விவசாயி ரூ.1,00,000 வரை கூட்டுறவுக் கடன் வாங்கினால், ஒரு வருடம் வரை வட்டியில்லா கடன் அளிக்கப்பட்டு வந்தது. இதன்காரணமாகத்தான் விவசாயிகள் போராடுகிறார்கள்.

கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது, 6 மாத காலத்திற்கு வட்டியில்லா கடனை கொடுத்தார். (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய முதலமைச்சர் பொறுப்பேற்ற பிறகு, 1 வருடம் வரை வட்டியில்லா கடன் வழங்கப்பட்டது; ஒரு இலட்சம் ரூபாய் கடன் வாங்கினால், ஒரு வருடம் வரை வட்டி கிடையாது. ஒரு வருடம் கடந்து ஒரு நாள் வந்தாலும், ஒரு இலட்சம் ரூபாய்க்கான அந்த ஒரு வருடத்திற்கான முழு வட்டியும் சேர்க்கப்படும். அந்தப் பிரச்சினைதான் தற்போது நிலவுகிறது.

### தேர்தல் அறிக்கையில் நீங்கள் சொன்னதைச் செய்யவில்லை!

விவசாயிகள் ஏன் கத்துகிறார்கள் என்றால், தற்போது வாங்கிய கடனை தள்ளுபடி செய்துவிடுவார்கள் என்று நினைத்து, அவர்கள் வாங்கிய கடனை காலத்திற்குள் கட்டாமல் இருந்துவிட்டார்கள். அவர்கள் loanயும் வாங்க முடியவில்லை. தவணை தவறிய கடன் என்ற காரணத்தினால், விவசாயிகள் கடனும் வாங்க இயலவில்லை. கொடுத்த கடனை செலுத்த முடியவில்லை. வாங்கிய கடனில் சுமார் 21,000 கோடி ரூபாய் அளவிற்கு நீங்கள் தள்ளுபடி செய்தாக வேண்டும். ஆனால் 6,000 கோடி ரூபாய்தான் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. அந்த 6,000 கோடி ரூபாய் தள்ளுபடி செய்வதற்கு, பல போராட்டங்கள் செய்து, ஒரு stepல் ஒரு bit போட்டீர்கள். 2,500 ரூபாய். அடுத்ததாக இரண்டாவது bit போட்டு, 50,000லிருந்து 75,000 என்று அறிவித்தீர்கள்.

ஒரு இலட்சம் வரை பயிர்க் கடன் கொடுக்கப்படுமென்று சொன்னீர்கள். அதைக் கொடுக்கவில்லை. விவசாயிகளுக்கு ஆண்டுக்கு ரூ.15,000/முன்கடனாகக் கொடுப்போம் என்று தேர்தல் அறிக்கையில் அறிவித்திருக்கின்றீர்கள். அதையும் இந்த நிதிநிலை அறிக்கையில் கொடுக்கவில்லை. இவையனைத்தும் நீங்கள் சொல்லியதுதான்.

எங்களுடைய ஆட்சியில் முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, நாங்கள் தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்ட ஒரு கோடியே 31 இலட்சம் பெண்களுக்கு மாதம் மாதம் ஆயிரம் ரூபாய் மகளிர் உரிமைத் தொகையை கொடுத்துக் கொண்டிருந்தோம். தொடர்ச்சியாக கொடுத்துக் கொண்டிருந்தோம். நாங்கள் சொன்ன பிறகு தற்போது நீங்கள் கொடுக்கின்றீர்கள். அதேபோல நான் முதல்வன் திட்டத்தின்மூலமாக 48 இலட்சம் மாணவர்கள், இளைஞர்கள் சிறப்பு பயிற்சி பெற்று வேலைவாய்ப்பு பெற தகுதியுடையவர்களாக, எங்களுடைய முதலமைச்சர் ஆட்சிக் காலத்தில் இத்திட்டம் உருவாக்கப்பட்டது.

இன்னும் சொல்லப்போனால், I.A.S., I.P.S. முதல் நிலை தேர்வுகளில், முன்பெல்லாம் 10 பேர், 20 பேர் தான் தேர்ச்சி பெற்றார்கள். நான் முதல்வன் திட்டத்தின்மூலமாக ஊக்கத்தொகை கொடுத்து, பொருளாதார உதவிகள் செய்து கிட்டத்தட்ட 57 பேர் நம்முடைய தமிழகத்தில் I.A.S., I.P.S. அதிகாரிகளாக தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் எங்களுடைய முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கொண்டுவந்த சிறப்புத் திட்டமாகும்.

அதேபோல விடியல் பேருந்து மூலமாக 45 சதவிகித பெண்கள் இப்போது வேலைக்குச் செல்கின்றனர். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் இருக்கின்ற பெண்கள்தான், 45 சதவிகித பெண்கள் பல தொழிற்சாலைகளுக்கு வேலைக்குச் செல்கிறார்கள். காரணம், விடியல் பேருந்து திட்டம். அதில் நீங்கள் விடியலை எடுத்துவிட்டு மகளிர் பேருந்து என்று மாற்றிவிட்டீர்கள். ஆக, திட்டத்தின் பெயரை மாற்றியிருக்கிறீர்கள்.

### எங்கள் எதிர்க்கட்சித் தலைவர் விளையாட்டுத்துறையில் பல சாதனைகளைச் செய்தார்!

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், என்றைக்கு பொறுப்பேற்றார்களோ அன்று முதல் இரவு பகலாக, மழையாக இருந்தாலும், வெள்ளமாக இருந்தாலும் இன்னும் சொல்லப்போனால் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சராக அவருடைய ஆட்சிக் காலத்தில் இளைஞர்களுக்கு விளையாட்டு பயிற்சி, ஒவ்வொரு ஊராட்சியிலும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டு, விளையாட்டு மைதானங்கள் உருவாக்கப்பட்டு, நல்ல ஆரோக்கியமான இளைஞர்களை உருவாக்க வேண்டுமென்ற நோக்கத்திலே அவர் உழைத்தார். கிராமம் முழுவதும் விளையாட்டுப் பயிற்சி, உலகளவிலான விளையாட்டுப் போட்டிகள் தமிழ்நாட்டை நோக்கி வருவதற்கு சாதனை புரிந்தவர் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள். அவர், மகாபலிபுரத்திலே ஒரு event நடத்தினார், உலகளவிலான chess போட்டி மற்றும் கார் பந்தய போட்டியை சென்னையிலே நடத்தினார். ஆக, இவ்வளவு சாதனைகளை செய்தோம். ஆக, ஐந்தாண்டு காலத்தில் விவசாயிகளும் மகிழ்ச்சியாக இருந்தார்கள்.

இங்கே இருக்கின்ற விவசாயிகளைப் பற்றி சொன்னால், முன்னாள் அமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் அவர்களும் விவசாயிதான். ஓ.எஸ். மணியன் அவர்கள் வேளாண் நிதிநிலை அறிக்கையின்போது சட்டமன்றத்தில் அடிக்கடி எழுந்து எங்களுக்கு ஆலோசனை கூறுவார்கள்.

தற்போது வாழைக்கு என்ற ஒரு திட்டத்தைச் சேர்த்திருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வாழைக்கு என்ற திட்டம் நாங்கள் கொண்டுவரவில்லை. தற்போது அந்தத் திட்டத்தை அறிவித்துள்ளீர்கள். Horticulture Departmentல் உள்ள ஒரு திட்டம். அதுபோல இந்த ஆட்சிக்கும் இன்னும் சொல்லப்போனால்,

அப்படியே சரியாக விடுகிறார்கள். அது உண்மையா அல்லது என்று தெரியவில்லை. இப்படி technical ஆக பேசி ஆட்சிக்கு வந்துள்ளீர்கள்; ஆனால் நாங்கள் realityஆக செய்து கொண்டிருக்கிறோம்.

### Acting கிடையாது Action ஆக இருந்தோம்!

இன்னும் நான் subjectக்கே வரவில்லை. தற்போது சேமிப்புக் கிடங்குகளைப் பொறுத்தவரையில், நேற்றைக்குக்கூட பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் அவர்கள் அறிக்கை விட்டிருக்கிறார்கள். காவிரி டெல்டா பகுதியில் 10 இலட்சம் நெல் மூட்டைகள் தேங்கியிருக்கின்றன. 10 இலட்சம் மூட்டைகள் அங்கே இருக்கின்றன. வெகு விரைவில் மழை வர இருக்கிறது. அவையெல்லாம் open godownல் அடுக்கியிருக்கின்றன. அங்கு ஒவ்வொரு Purchase Centreலும் நெல் இருக்கிறது.

கடந்த ஆட்சியில் நாங்கள் இருக்கும்போது, நானும் சக்கரபாணி அவர்களும் அந்த spotக்கு சென்றோம். அங்கு அப்போது துணை முதலமைச்சராக இருந்த எங்கள் மரியாதைக்குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், திடீரென்று தஞ்சைக்கு ஆய்விற்குச் சென்று, இரவு அடாத மழை என்று நாங்கள் கேள்விப்பட்டபோது நாங்கள் wagonல் அனுப்பிவைத்தோம். திடீரென்று மழை வந்த காரணத்தினால், அப்போது துணை முதலமைச்சராக இருந்த மரியாதைக்குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், தஞ்சைக்குச் சென்று ஆய்வு செய்து, உடனுக்குடன் மாற்று ஏற்பாடுகள் செய்து, அந்த மூட்டைகளை உடனுக்குடன் மாற்றி அமைத்து வைத்தோம். அத்தகைய action, acting கிடையாது; action ஆக நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம்.

ஆகவே, அந்தளவிற்கு உணர்வுப்பூர்வமாக நாங்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம். நாங்கள், இன்னும் சொல்லப்போனால், உங்கள் பக்கம் இருப்பவர்களெல்லாம், படத்தைப் பார்த்து வந்தவர்கள். நாங்களெல்லாம் கொள்கை பிடித்து, முரசொலி படித்து, தினந்தோறும் செய்தி படித்து, பொதுக் கூட்டத்தில் பேசி, வந்தவர்கள்தான் இந்தப் பக்கம் உள்ளவர்கள். அண்ணா தி.மு.க. ஆக இருந்தாலும் சரி, தி.மு.க. ஆக இருந்தாலும் சரி; நாங்கள் பேசி வந்தவர்கள். ஆகவே, மக்களுடைய பணிகள் பற்றி தெரியும். அந்த அடிப்படையில்தான், நாங்கள் மக்களின் உணர்வுக்கேற்ப எங்களுடைய முதலமைச்சராக இருந்த எங்கள் அண்ணன் தளபதி ஸ்டாலின் அவர்கள், எங்களைப் பணியாற்ற வைத்தார்கள். மக்களும் அங்கு மகிழ்ச்சியாக இருந்தார்கள். விவசாயிகள் போராட்டம் இல்லாமலே வாழ்ந்தார்கள்.

### வேளாண் துறைக்கு குறைவான நிதி ஒதுக்கீடு!

அத்தகைய நாங்கள் பட்ஜெட் போட்டு, மக்களுடைய கருத்துகளை வாங்கி, நாங்கள் பட்ஜெட்டாக அறிவித்தோம். ஆகவே, நீங்கள் அறிவித்துள்ள நிதி ஒதுக்கீட்டைப் பார்த்தால் வேளாண் பட்ஜெட்டில் வேளாண் துறைக்கு எங்களுடைய ஆட்சியில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது கிட்டத்தட்ட 15 ஆயிரத்து 230 கோடி ரூபாய். உங்களுடைய ஆட்சியில் உருவாக்கியது 14 ஆயிரத்து 955 கோடி ரூபாய். ஆக, இப்போது இந்த வேளாண்மை துறைக்கு 275 கோடி ரூபாய் குறைவாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு இலவச மின்சார மானியம் தி.மு.க. ஆட்சியில் வழங்கியது.

ஆகவே, இது கடந்த ஆண்டு பட்ஜெட் புத்தகம்; பச்சை, நீலம் வண்ணங்களில் உள்ளது. உங்கள் பட்ஜெட் இந்த நிறம், இந்த பட்ஜெட். இந்த கலர் பட்ஜெட். இரண்டு வேளாண் பட்ஜெட் புத்தகங்களை ஒப்பிட்டு காண்பித்தார்)

இதில் நீங்கள் படித்ததுதான், நாங்கள் எங்களுடைய பட்ஜெட்டில் படித்ததுடன் ஒப்பிட்டு பார்த்தோம். உங்களுடைய Secretaryக்குத் தெரியும். உங்களுடைய செயலாளருக்குத் தெரியும். ஆகவே, விவசாயிகளுக்கு மின்சாரத்தை அவர் சொன்னார் இலவச மின்சாரத்திற்காக நாங்கள் ஒதுக்கியது ரூ.8,186 கோடி, நீங்கள் ஒதுக்கியது ரூ.7,432 கோடி. ஆக, ரூ.754 கோடி குறைவாக இருக்கிறது. எனக்கென்னவென்றால், இலவச மின்சாரத்தை நிறுத்தப் போகிறீர்களா என்ற doubt அதுதான்.

அதேபோன்று, நுண்ணீர் பாசனத் திட்டம், அதில் எங்களுடைய ஆட்சிக் காலத்தில் ரூ.1,168 கோடி நாங்கள் ஒதுக்கீடு செய்திருந்தோம். ஆனால், உங்களுடைய ஆட்சிக் காலத்தில் ரூ.785 கோடி அறிவித்திருக்கின்றீர்கள். உங்களுடைய திட்டத்தின் பெயர் நீர் மேலாண்மைக்கான துளித் துளித் தண்ணீர் திட்டம் என்று போட்டிருக்கிறீர்கள். நாங்கள் நுண்ணீர் பாசனத் திட்டம் கொண்டுவந்தோம். நீங்கள் நீர் மேலாண்மைக்கான துளித் துளித் தண்ணீர் திட்டத்தை போட்டிருக்கிறீர்கள். அதில் ரூ.383 கோடி minus ஆக, குறைவாக இருக்கிறது. அதேபோன்று, குறுவை பயிர் காப்பீடு திட்டத்திற்கு எங்களுடைய ஆட்சிக் காலத்தில் ரூ.841 கோடி நாங்கள் ஒதுக்கினோம்.

ஆனால், உங்களுடைய ஆட்சிக் காலத்தில், இப்போது அறிவித்திருக்கிறீர்கள் ரூ.648 கோடி. ஆக, ரூ.193 கோடி குறைவு. உங்களுடைய புத்தகத்தில் இருக்கிறது. இது நான் புத்தகத்தில் படித்ததுதான்; எங்களுக்குத் தெரியாது. ஆக, குறுவை தொகுப்புத் திட்டத்திற்கு ரூ.210 கோடி நாங்கள் கொடுத்தோம். நாங்கள் டெல்டா பகுதிகளுக்கும் கொடுத்தோம். நீங்கள் கொடுத்த குறுவை தொகுப்பு ரூ.134 கோடி ஒதுக்கியிருக்கிறீர்கள். ரூ.75 கோடி குறைவாக உள்ளது. மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தில் ரூ.142 கோடி.

### இலவச மின்சாரம் கொடுத்தோம்!

அதேபோல, மின்சாரத் திட்டம், எங்களுடைய ஆட்சிக் காலத்தில், எங்களுடைய முதலமைச்சர் அவர்கள் 2 இலட்சம் மின் இணைப்பு பெரிய வரப் பிரசாதம். பெரிய வரப்பிரசாதம். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான், பயிரினுடைய விளை நிலப்பரப்பு அதிகமாகியது. 2 இலட்சம் மின் இணைப்புகள் விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டது. தற்போது, இந்த ஆட்சியில் புதிய மின் இணைப்பு விஷயமாக அறிவிப்பே இல்லை. இருக்கின்ற மின்சாரமே வருவதில்லை.

ஆக, நாங்கள் 2 இலட்சம் இலவச மின் இணைப்புகள் கொடுத்தோம். 2 இலட்சம் இலவச மின் இணைப்புகள் கொடுத்ததனால்தான் தற்போது விவசாய நிலம் அதிகமாகியது.

இன்னும் சொல்லப்போனால், எங்களுடைய ஆட்சிக் காலத்தில் அதிகமான நெல் விளைச்சல், அதிகமாக நெல் கொள்முதல், விவசாயிகள் நெல் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டு அதை பாதுகாப்பதற்கு உங்களால் முடியவில்லை இப்போது. அதுதான். அதேபோல, ‘C’ and ‘D’ வாய்க்கால் தூர் வாருகின்ற பணிக்கு எங்களுடைய ஆட்சிக் காலத்தில் 13 கோடியே 80 இலட்சம் ரூபாய் வழங்கினோம். இப்போது, உங்களுடைய ஆட்சிக் காலத்தில் 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆக, 3 கோடி ரூபாய் குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, புதிய விதை சுத்திகரிப்பு நிலையத்திற்கு 15 கோடி ரூபாய் நாங்கள் ஒதுக்கீடு செய்தோம். இப்போது, 7 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 8 கோடி ரூபாய் குறைவாக இருக்கிறது. மக்காச்சோள சாகுபடி திட்டத்திற்கு 41 கோடி ரூபாய் நாங்கள் ஒதுக்கீடு செய்தோம். உங்களுடைய ஆட்சிக் காலத்தில் 36 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 5 கோடி ரூபாய் குறைவாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

சூரிய மின்சக்தி pumpsets அமைக்க நாங்கள் 24 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருந்தோம். நீங்கள் 23 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளீர்கள். இதையெல்லாம் ஏன் சொல்கிறேன் என்றால், நீங்கள் ஒதுக்கீட்டை அதிகரிப்பீர்கள் என்ற ஆர்வத்தில் மக்களும், விவசாயிகளும் இருந்தார்கள். எங்களுடைய ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட திட்டங்கள் அனைத்துத் திட்டங்களையும் நான் படிக்கவில்லை. குறைவாகத்தான் படித்துள்ளேன். இந்தளவிற்கு குறைவாக வேளாண் பட்ஜெட்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை உங்களுடைய கவனத்திற்கும், முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேளாண் திட்டத்தில் பெயர் மாற்றம். எங்களுடைய ஆட்சிக் காலத்தில் மாடித் தொகுப்புத் திட்டம் என்று நாங்கள் அறிவித்து செயல்படுத்திக் கொண்டிருந்தோம். இப்போது உங்களுடைய ஆட்சிக் காலத்தில் அதே திட்டத்திற்கு, வெற்றி இல்லத்தரசி வீட்டுத் தோட்டம் என்று வேறு புதிய பெயரிடப்பட்டுள்ளது. நாங்கள் பொதுவாக வெறும் மாடித் தோட்டம் என்று பெயரில் சென்னை போன்ற இடங்களில் தோட்டம் இல்லாத பகுதிகளுக்கெல்லாம், வீடுகளுக்கெல்லாம் மாடித் தோட்டம் மூலமாக அவரவர் வீட்டிலேயே தேவையான காய்கறிகளை மாடியைப் பயன்படுத்தி வளர்ப்பதற்கு, தொகுப்புத் திட்டத்தை அறிவித்து செயலாற்றிக் கொண்டிருந்தோம்.

### உங்களின் அறிவிப்புகளெல்லாம் தோல்வியில் முடிந்துள்ளது!

பெயர் மாற்றத்தை சொல்கிறேன். எங்களுடைய உழவன் செயலி திட்டத்திற்கு நீங்கள் AI உழவர் செயலி என்றும், பனை மேம்பாட்டு இயக்கத்திற்கு, பனை பாதுகாப்பு இயக்கம் என்றும், எண்ணெய் வித்துக்கள் இயக்கத்திற்கு, பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்களில் தன்னிறைவுக்கான இயக்கம் என்றும், ஒருங்கிணைந்த தென்னை வளர்ச்சித் திட்டம் என்பது தென்னைக்கான சிறப்புத் திட்டம் என்றும் பெயர் மாற்றப்பட்டுள்ளது. அதேபோல, விவசாயிகளுக்கு விருது வழங்கும் திட்டத்தில் மக்கள் சேவகர்கள் விருது விவசாயிகளுக்கு வழங்கும் திட்டம் அறிவித்திருந்தோம். நீங்கள் அந்தத் திட்டத்திற்கு மக்கள் சேவகர் அஞ்சலையம்மாள் சிறு, குறு விவசாயி விருது என்று அறிவித்திருக்கிறீர்கள். நீடித்த நிலையான பருத்தி இயக்கம் என்பது வெற்றி விவசாயி விருது என்று மாற்றப்பட்டிருக்கிறது.

SC, ST கூடுதல் மானியத் திட்டம் அறிவித்து ஆண்டுதோறும் செயல்படுத்திக்கொண்டிருந்தோம். அந்தத் திட்டத்திற்கு அண்ணல் அம்பேத்கர் வேளாண் உதவித் திட்டம் என்று பெயர் மாற்றத்தை நீங்கள் உருவாக்கி அறிவித்திருக்கிறீர்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேபோல, நெல்லுக்கு, கரும்புக்கு கடன் தள்ளுபடி முழுமையாக தள்ளுபடி செய்வீர்கள் என்று நம்பிக்கொண்டிருக்கின்றோம். விவசாயிகள் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். அதில் கால்பகுதிதான் தள்ளுபடி செய்துள்ளீர்கள். முக்கால் இலட்சம் ரூபாய் என்பதை ஒரு இலட்சம் என்று அறிவிக்கப்படும் என்று சொன்னீர்கள். ஐந்து இலட்சம் ரூபாய்வரை தள்ளுபடி செய்யப்படும் என்று சொன்னீர்கள். அது அறிவிக்கப்படவில்லை. கடன் தள்ளுபடியைப் பொறுத்தவரையில் அது failure ஆக உங்களுடைய அறிவிப்பு failure என்று சொல்லலாம்.

அதேபோல, அரிசி விலை உயர்வு. இப்போது நெல் விலையை அறிவித்திருக்கிறீர்கள். நெல் விலையை உயர்த்திக் கொடுத்தாலும், அதைவிட கூடுதலாக தனியார் நெல் வியாபாரிகள் நெல்லை வாங்குகிறார்கள். இந்த ஆண்டு DPCல் நெல்லை கொள்முதல் செய்வது என்பது கொஞ்சம் கடினம். எங்களுடைய ஆட்சிக் காலத்தில் வியாபாரிகள் நெல்லை வாங்கவில்லை. அரசாங்கம்தான் வாங்கியது. ஆனால், இப்போது வியாபாரிகள் நெல்லை கூடுதல் விலை கொடுத்து வாங்குகிறார்கள். நீங்கள் கொடுத்த அறிவிப்பைவிட நெல் விலை வெளி market ல் அதிகமாக வாங்குகிறார்கள்.

### குறுவை சாகுபடியைக் காப்பாற்றுங்கள்!

குறுவை சாகுபடி பாதிப்பிற்காக வறட்சி நிவாரணம்தான் நாங்கள் கேட்டோம். வறட்சி நிவாரணம் பற்றி நாங்கள் கேட்டபோதுதான் முதலமைச்சர் அவர்கள் பேப்பர் படிக்கவில்லையா என்று கேட்டார்கள். வறட்சி ஏற்பட்டதால் குறுவை சாகுபடி பாதிக்கப்பட்டு, மூன்றரை இலட்சம் ஏக்கர் நிலத்தில் மட்டும்தான் தற்போது குறுவை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஆகவே அதை யாவது காப்பாற்ற வேண்டும். குறுவை சாகுபடியை நம்பியுள்ள விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும். குறுவை சாகுபடி பொய்த்துப் போன காரணத்தால் விவசாயத் தொழிலாளர்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும் என்கிற கோரிக்கையை எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வைத்துள்ளார்கள். அதையும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கருப்பு அரிசி பற்றிச் சொன்னார்கள். தி.மு.க ஆட்சியில்தான் கருப்பு அரிசி ஒழிக்கப்பட்டது. Colour sorter ஒவ்வொரு ஆலையிலும் அமைக்கப்பட வேண்டும் என்று அப்போது உணவுத் துறை அமைச்சராகப் பொறுப்பு வகித்த சக்கரபாணி அவர்களின் முயற்சியால் அறிவிக்கப்பட்டு, அனைத்து அரிசி ஆலைகளிலும் Colour sorter அமைக்கப்பட்டது. கருப்பு அரிசி வருவதற்குத் தற்போதைய காரணம் என்னவென்றால், கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகளை அவ்வப்போது நீங்கள் அப்புறப்படுத்த வேண்டும். 10 இலட்சம் நெல் மூட்டைகள் பொது வெளியில் வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை அப்புறப்படுத்தி பாதுகாப்பாக வைக்க வேண்டும்.

### அரசு ஊழியர்கள் மத்தியில் குழப்பம்!

அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஓய்வூதிய நிதி 14,000 கோடி ரூபாய் அளவிற்கு பட்ஜெட்டில் குறைக்கப்பட்டுள்ளது. திராவிட மாடல் ஆட்சியில், அரசு ஊழியர்கள் மற்றும் அரசு ஆசிரியர்களின் கோரிக்கைகளுக்கிணங்க, உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் (TAPS) அறிமுகப்படுத்தப்பட்டு, 11,000 கோடி ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. தற்போதைய அரசு, ஏற்கெனவே ஒதுக்கீடு செய்த 11,000 கோடி ரூபாய் ஒதுக்கீட்டை முழுமையாக இரத்து செய்ததோடு மட்டுமல்லாமல், மேலும் 3,000 கோடி ரூபாய் அளவிற்கும் நிதியொதுக்கீட்டை குறைத்துள்ளது. இதனால், அரசு ஊழியர்கள் மத்தியில் குழப்பமான ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. பழைய ஓய்வூதியத் திட்டம் உண்டா? TAPS திட்டம் உண்டா? எனக் கேள்வி எழுகிறது. அரசு அதற்கான விளக்கத்தை பதிலுரையில் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

### அரிசி விலை உயர்வு!

அரிசி விலை உயர்கிறது. அரிசி விலை ஒரு கிலோ 80 ரூபாய் அளவிற்கு உயர்ந்து கொண்டிருக்கிறது. எங்களுடைய ஆட்சிக் காலத்தில் 40 ரூபாய், 45 ரூபாய் என்ற அளவில்தான் இருந்தது. விலைவாசி உயர்வும், மளிகைப் பொருட்களின் விலையும் உயர்ந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, அதையும் கட்டுப்படுத்த வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களையும், துறை அமைச்சர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த பட்ஜெட்டைப் பொறுத்தவரையில், “பழைய கள்; புதிய மொந்தை” என்று கிராமத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள். அதே பழைய கள் புதிய மொந்தையில், அதாவது புதிய கலயத்தில். அவ்வாறுதான் இந்த பட்ஜெட்டை நான் கருதுகிறேன். தி.மு.க. வேளாண் பட்ஜெட்டில் தாக்கல் செய்து குறிப்பிட்டதைத்தான், இவர்களும் குறிப்பிடுகிறார்களே என்று கிராமத்தில் வசிக்கும் மக்கள் பேசிக்கொள்கிறார்கள். பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கூடுதலாக நம்பிக்கையாகநிதியொதுக்கீடு செய்ய வேண்டும். தமிழ்நாட்டில் வசித்து வருபவர்களில் 60 சதவிகிதம் பேர், 70 சதவிகிதம் பேர் விவசாயிகளாக இருக்கிறார்கள். அரசு கொடுக்கின்ற திட்டங்கள் குறைவான திட்டங்களாக உள்ளன. நாங்கள், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் போன்றவற்றைத் தந்தோம்.

12,525 ஊராட்சிகளிலும் நாங்கள் ஒவ்வொரு திட்டத்தையும் முழுமையாகக் கொண்டு சென்றோம். ஆகவே, இவை அனைத்து விவசாயிகளும், அனைத்து மக்களும் பயன்பெறும் திட்டங்களாகும். இவ்வளவு விவசாயிகளுக்கும் திட்டங்களைக் கொண்டு வர வேண்டுமென்று உங்களைக் கேட்டு, இவ்வளவு நேரம் பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, எனக்குப் பேசுவதற்கு அனுமதியளித்து, வாய்ப்பு தந்த எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர் மரியாதைக்குரிய உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் பேசினார்.